இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 03-12-2024

# எந்த மோடி சொல்வது உண்மை?

மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அரசு, இந்திய நாட்டின் நிதி நிலைமையை தரை மட்டத்துக்கு இறக்கிய வரலாற்று வேதனையைச் செய்துள்ளது. இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது 5.4 விழுக்காடு என்கிற அளவில் சரிந்துள்ளது. இரண்டு ஆண்டுகள் இல்லாத அளவுக்கு சரிந்துள்ளது. இதனைச் சொல்வதும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தான்.

ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறையின் கீழ் செயல்படும் தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்.எஸ்.ஓ.) ஒரு செய்திக் குறிப்பை இரண்டு நாட்களுக்கு முன்னால் வெளியிட்டுள்ளது. **“கடந்த 2023-24 ஆம் ஆண்டின் ஜூலை - செப்டம்பர் காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.1 விழுக்காடாக இருந்தது. இந்த நிகழ் காலாண்டில் ஜூலை - செப்டம்பர் காலாண்டில் 5.4 விழுக்காடாகச் சரிந்துள்ளது. இதற்கு நுகர்வு மற்றும் உற்பத்தித் துறையில் ஏற்பட்ட சரிவே காரணம்”** என்று அந்த அறிக்கை சொல்கிறது.

2022-23 ஆம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் (2022 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் வரை) நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4.3 விழுக்காடு குறைந்து இருந்தது. அதன்பிறகு இப்போது 5.4 விழுக்காடாகக் குறைந்துள்ளது. ஒன்றிய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகராக இருக்கும் வி.அனந்த நாகேஸ்வரன், **“பொருளாதார வளர்ச்சியில் சரிவு ஏற்பட்டுள்ளது ஏமாற்றம் அளிக்கிறது”** என்று சொல்லி இருக்கிறார். இந்த ஏமாற்றத்துக்கு என்ன காரணம் என்பதை வெளிப்படைத் தன்மையுடன் விவாதிக்கும் நிலையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இல்லை.

**“நாட்டின் பொருளாதார செயல்திறன் அழிவை எதிர்கொண்டு வருகிறது. ஆனால் பிரதமர் மோடி மிகைப்படுத்தப்பட்ட பிம்பங்களை உருவாக்கி வருகிறார். தன்னை மனிதப் பிறவியல்ல என்று கூறிக் கொள்ளும் பிரதமரும், அவரது புகழ்பாடும் சகாக்களும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சரிவுக்கான காரணத்தை உள்நோக்கத்துடன் புறக்கணிக்கின்றனர்”** என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெயராம் ரமேஷ் சொல்லி இருக்கிறார். ‘தொழிலாளர்களுக்கான ஊதிய வளர்ச்சியில் நிலவும் மந்த நிலையே பொருளாதார வளர்ச்சி சரிவுக்கு காரணம்’ என்று நிதி தரவுகள் சேவை நிறுவனம் சொல்லிய அறிக்கையைச் சுட்டிக்காட்டி ஜெயராம் ரமேஷ் சொல்லி இருக்கிறார்.

இந்தக் காலாண்டில் நாட்டின் வளர்ச்சி 7 விழுக்காடாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி கணித்திருந்த நிலையில், 5.4 விழுக்காடுதான் கிடைத்துள்ளது. ரிசர்வ் வங்கியின் கணிப்பு பொய்யாகி உள்ளது. உற்பத்தி, சுரங்கத்துறையில் நிலவிய மந்தநிலையே பொருளாதார வளர்ச்சி குறைந்ததற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

கடந்த நிதியாண்டில் இதே காலத்தில் 14.30 விழுக்காடாக இருந்த உற்பத்தித் துறை வளர்ச்சியானது தற்போது 2.20 விழுக்காடாகவும், 11.10 விழுக்காடாக இருந்த சுரங்கத் துறை வளர்ச்சியானது 0.01 விழுக்காடாகவும் குறைந்ததே பொருளாதார வளர்ச்சி குறைய முக்கியக் காரணமாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

அமெரிக்க பிரிஸ்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் அசோகா மோடி, ஒரு கட்டுரையை எழுதி இருக்கிறார். **“கடன் வளர்ச்சியைச் சார்ந்து இயங்கும் இந்தியா மலை முகட்டை நோக்கி பிரேக்குகள் பழுதான கார் பயணிப்பதைப் போன்றது”** என்று சொல்லி இருக்கிறார்.

**“வேலை வாய்ப்புகள் நிறைந்த வளர்ச்சியை உருவாக்காமல் மொத்த உள்நாட்டு உற்பத்தியை உயர்த்திக் காட்ட நிதிச் சேவைத் துறையில் மட்டும் கவனம் செலுத்தப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு நிதித்துறை வளர்ச்சியின் மூலம் பெறப்பட்டுள்ளது. விரைவான கடன் அதிகரிப்பும் மிகை மதிப்பீடு செய்யப்பட்ட மாற்று விகிதமும் ஒரு ஆபத்தான கலவை என்பதை வரலாறு தெளிவாக்குகிறது. ‘நிதிச் சந்தை மட்டுமே வளர்ச்சியைத் தூண்டும், மனித வள அபிவிருத்தியின் குறைபாட்டைக்களையும்’ என்பது மத்திய ஆட்சியாளர்களின் கண்மூடித்தனமான கனவு. நிதி நெருக்கடி வேலைவாய்ப்புகளை விழுங்கி விடும்.”** என்று சொல்லி இருக்கிறார். அதைத்தான் இப்போது புள்ளிவிபரங்களின் மூலமாகப் பார்க்கிறோம்.

தொழிலாளர்களின் நலத் திட்டங்களைக் குறைத்து விட்டு வர்த்தக நிறுவனங்களுக்கான வரிச் சலுகைகளையும், மானியங்களையும் அதிகரித்தால் இந்தியப் பொருளாதாரம் வளர்ந்து விடும் என்று பா.ஜ.க. அரசு நினைத்தது. அது பொருளாதாரத்தை வளர்க்காது என்பது இப்போது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது எதையும் தெரியாமல், ‘அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியர்களின் தனிநபர் வருமானம் இரு மடங்காக உயரும்’ என்று சொல்லி இருக்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். வரும் பத்தாண்டுகளில் சாமானியர்களின் வாழ்க்கைத் தரம் செங்குத்தான உயர்வை காணும் என்றும் அவர் சொல்லி இருக்கிறார். “கடந்த பத்து ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் காரணமாகவும் கோவிட் அதிர்ச்சி மங்குவதன் காரணமாகவும் வரும் ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இன்னும் சிறப்பாக வெளிப்படும். இதன் காரணமாக பொருளாதார வளர்ச்சி மேம்பாடுகள் தொடரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்” என்று ஒரு மாதத்துக்கு முன் பேசினார் நிர்மலா சீதாராமன். அக்டோபரில் பேசினார். நவம்பரில் வந்துள்ள புள்ளிவிபரம் அப்படி இல்லை என்று சொல்கிறது.

**‘இந்தியா வளர்கிறது’ என்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. ‘பிரேக் பிடிக்காத காரில் செங்குத்தாகச் செல்கிறீர்கள்’ என்கிறார் அசோகா மோடி.**

**எந்த மோடி சொல்வது உண்மை?**





முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2024) செங்கல்பட்டு மாவட்டம், இடைகழிக்காடு பகுதியில் ”ஃபெஞ்சல் புயல் காரணமாக பெய்த கனமழையால் மின்கம்பங்கள் வீழ்ந்ததையொட்டி, மின்கம்பங்கள் அமைத்திடும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர் எம்.பாபு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே.நந்தகுமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.அருண்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

அரசினர் தனி தீர்மானம் - முதலமைச்சர் கொண்டு வருகிறார்!

## டிச.9,10 தேதிகளில் சட்டமன்ற கூட்டத் தொடர்!

### சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!



சென்னை, டிச. 3-

சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறியதாவது:-

வருகின்ற 9 தேதி மற்றும் 10 தேதி சட்டமன்ற கூட்டத்தொடர் நடைபெறும்.

இரண்டு நாட்களும் கேள்வி - பதில்கள் இருக்கும்.

முதல் நாளான 9ஆம் தேதி நிதியமைச்சர் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கையை பேரவையில் தாக்கல் செய்ய உள்ளார்.

அன்றைய தினமே அரசினர் தனி தீர்மானத்தை முதலமைச்சர் அவர்கள் கொண்டு வர இருக்கிறார்.

மதுரை மாவட்டத்தில் இந்துஸ்தான் ஜிங் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்க்சன்ஸ் சுரங்க உரிமையை உடனடியாக ரத்து செய்யவும் சம்பந்தப்பட்ட மாநில அரசின் அனுமதி இன்றி சுரங்க உரிம ஏலங்களை மேற்கொள்ளக்கூடாது என ஒன்றிய அரசை வலியுறுத்தி அரசினர் தனி தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளது.

இவ்வாறு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேட்டியின்போது கூறினார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (2.12.2024) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

ஃபெஞ்சல் புயல்: – போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும்

# தமிழ்நாடு அரசின் நிவாரண நடவடிக்கைகள்!

### மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

**சென்னை, டிச.3 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் காரணமாக தொடர்ந்து மழை பெய்து வருவதையொட்டி, நேற்று முன்தினம் (1.12.2024) வட சென்னை கொளத்தூர் பகுதிகளில் மழைநீர் வடியும் பணிகளை பார்வையிட்ட பின்னர், தமிழ்நாடு அரசின் சார்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். குறிப்பாக, மழையால் மிகவும் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் நிலவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.**

வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த ஃபெஞ்சல் புயல் 30.11.2024 அன்று மாலை 5.30 முதல் இரவு 11.30 வரை காரைக்கால் மற்றும் மகாபலிபுரத்திற்கு இடையே மணிக்கு 70 முதல் 90 கிலோ மீட்டர் காற்றின் வேகத்துடன் கரையைக் கடந்தது. இதன் காரணமாக, நேற்று முன்தினம் (1.12.2024) காலை 8.30 மணி வரை சராசரியாக விழுப்புரம் மாவட்டத்தில் 22.8 செ.மீ., திருவண்ணாமலை மாவட்டத்தில் 12.00 செ.மீ., கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 11.3 செ.மீ., காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 செ.மீ., மழையும் பெய்துள்ளது.

குறிப்பாக, விழுப்புரம் மாவட்டம் மயிலத்தில் 47.7 செ.மீ., நெமிலியில் 45.7 செ.மீ. ஆத்தூரில் 29 செ.மீ., திருவண்ணாமலை மாவட்டம், ஊகூரில் 25 செ.மீ., கடலூர் மாவட்டம், காளையூரில் 21 செ.மீ. மழையும் பெய்துள்ளது.

முதலமைச்சர் அவர்களது உத்தரவின்படி, விழுப்புரம் மாவட்டத்திற்கு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதப் படுத்திட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியுடன் இணைந்து செயல்பட போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று கடலூர் மாவட்டத்திற்கு வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், விழுப்புரம் மாவட்டத்தில், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கிடவும், பணிகளை துரிதப்படுத்தவும் நீர்வள ஆதாரத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.மணிவாசன், தலைமையில், பெருநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் ஆல்பி ஜான், பேரூராட்சிகள் துறை இயக்குநர் கிரன் குராலா, ஊரக வளர்ச்சி துறை இயக்குநர் பொன்னையா, நகராட்சி நிர்வாக ஆணையர் சிவராசு ஆகியோரை அனுப்பி வைக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், போக்குவரத்து துறை ஆணையருமான எஸ்.ஜெ.சுன்சோங்கம் ஜடக்சிரு மூன்று நாட்களாக விழுப்புரத்தில் முகாமிட்டு நிவாரணப் பணிகளை கண்காணித்து வருகிறார்.

கடலூர் மாவட்டத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி தலைமையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்ட இயக்குநர், எஸ்.எ.ராமன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மேற்கண்ட பணிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களிடம் நேற்று முன்தினம் (1.12.2024) மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காணொலி காட்சி வாயிலாக தொடர்பு கொண்டு, மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

**நிவாரண முகாம்கள்**

167 நிவாரண முகாம்களில் மொத்தம் 6022 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் இதர அத்தியாவசிய வசதிகள் செய்துதர முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**மீட்புப் படை**

முதலமைச்சர் அவர்களது உத்தரவின்படி விழுப்புரம் மாவட்டத்திற்கு தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 14 குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடலூருக்கு 3 குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் அனைத்தும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்த ஆய்வுக் கூட்டத்தின்போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், மின் துறையினரால் அமைக்கப்பட்டுள்ள, 70 குழுக்களும் மின்சாரம் தடையின்றி வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், மின் தடை ஏற்பட்டுள்ள இடங்களில் மீண்டும் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், பழுதடைந்த மின்கம்பங்களை உடனடியாக மாற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் மழைநீர் சென்றிருந்தால், அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், அதற்குத் தேவையான மோட்டார் பம்பு செட்டுகளை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்றும், முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு முறையான உணவு, அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் திருமதி பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.தி.மு.க., தே.மு.தி.க., பா.ஜ.க., அ.ம.மு.க., நாம்தமிழர் கட்சியைச் சேர்ந்த 5 ஆயிரம் பேர் பா.ஜ.க. தொழில்பிரிவு மாவட்டச் செயலாளர் பி.பிரபாகரன் தலைமையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், பொருளாளர் சத்தியமூர்த்தி, வடக்கு ஒன்றியச் செயலாளர் மணி, திண்டுக்கல் ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, மாநகரச் செயலாளர் ராஜப்பா உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.